ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திவ்ய பிரபந்தம் போற்றும் திருவித்துவக்கோடு

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக3மாந்தமஹாதே3ஶிகாய நம:

# திவ்ய பிரபந்தம் போற்றும் திருவித்துவக்கோடு

## பொதுத்தனியன்கள்

ராமாநுஜ த3யாபாத்ரம் ஜ்ஞாநவைராக்3ய பூ4ஷணம் ।
ஸ்ரீமத்3வேங்கடநாதா2ர்யம் வந்தே3 வேதா3ந்ததே3ஶிகம் ॥ 1 ॥

ஸ்ரீஶைலேஶ த3யாபாத்ரம் தீ4ப4க்த்யாதி3கு3ணார்ணவம் ।
யதீந்த்3ரப்ரவணம் வந்தே3 ரம்யஜாமாதரம் முநிம் ॥ 2 ॥

லக்ஷ்மீநாத2ஸமாரம்பா4ம் நாத2யாமுநமத்4யமாம் ।
அஸ்மதா3சார்யபர்யந்தாம் வந்தே3 கு3ருபரம்பராம் ॥ 3 ॥

யோ நித்யமச்யுதபதா3ம்பு3ஜயுக்3மருக்ம -
வ்யாமோஹதஸ்ததி3தராணி த்ரு'ணாய மேநே ।
அஸ்மத்3கு3ரோர்ப4க3வதோஸ்ய த3யைகஸிந்தோ4:
ராமாநுஜஸ்ய சரணௌ ஶரணம் ப்ரபத்3யே ॥ 4 ॥

மாதா பிதா யுவதயஸ்தநயா விபூ4தி:
ஸர்வம் யதே3வ நியமேந மத3ந்வயாநாம் ।
ஆத்3யஸ்ய ந: குலபதேர்வகுளாபி4ராமம்
ஸ்ரீமத் தத3ங்க்4ரியுக3ளம் ப்ரணமாமி மூர்த்4நா ॥ 5 ॥

பூ4தம் ஸரஶ்ச மஹதா3ஹ்வய ப4ட்டநாத2
ஸ்ரீப4க்திஸார குலஶேக2ர யோகி3வாஹாந் ।
ப4க்தாங்க்4ரிரேணு பரகால யதீந்த்3ர மிஶ்ராந்
ஸ்ரீமத் பராங்குஶமுநிம் ப்ரணதோऽஸ்மி நித்யம் ॥ 6 ॥

## பெரியாழ்வார் தனியன்கள்

கு$_3$ருமுக$_2$மநதீ$_4$த்ய ப்ராஹ வேதா$_3$நஶேஷாந்
நரபதிபரிக்லு’ப்தம் ஶுல்கமாதா$_3$துகாம:।
ஶ்வஶுரமமரவந்த்$_3$யம் ரங்க$_3$நாத$_2$ஸ்ய ஸாக்ஷாத்
த்$_3$விஜகுலதிலகம் தம் விஷ்ணுசித்தம் நமாமி ॥

மின்னார் தட மதிள் சூழ் வில்லிபுத்தூர் என்றொரு கால் ⋆
சொன்னார் கழற்கமலம் சூடினோம் ⋆
முன்னாள் கிழி அறுத்தான் என்றுரைத்தோம் ⋆
கீழ்மையினிற் சேரும் வழி அறுத்தோம் நெஞ்சமே ! வந்து

பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தான் என்று ⋆
ஈண்டிய சங்கம் எடுத்தூத ⋆
வேண்டிய வேதங்களோதி விரைந்து கிழி அறுத்தான் ⋆
பாதங்கள் யாமுடைய பற்று

## பெரியாழ்வார் திருமொழி – திருப்பல்லாண்டு

‡ பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு ⋆
பல கோடி நூறாயிரம் ⋆
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா ! ⋆
உன் சேவடி செவ்வி திருக்காப்பு ॥ **1.1.1** ॥

‡ அடியோமோடும் நின்னோடும் ⋆
பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு ⋆
வடிவாய் நின் வல மார்பினில் ⋆
வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு ⋆
வடிவார் சோதி வலத்துறையும் ⋆
சுடராழியும் பல்லாண்டு ⋆

படை போர் புக்கு முழங்கும் ⋆
அப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டே ॥ **1.1.2** ॥

வாழாட் பட்டு நின்றீர் உள்ளீரேல் ⋆
வந்து மண்ணும் மணமும் கொண்மின் ⋆
கூழாட் பட்டு நின்றீர்களை ⋆
எங்கள் குழுவினில் புகுதலொட்டோம் ⋆
ஏழாட் காலும் பழிப்பிலோம் நாங்கள் ⋆
இராக்கதர் வாழ் ⋆
இலங்கை பாழாளாகப் படை பொருதானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.3** ॥

ஏடு நிலத்தில் இடுவதன் முன்னம் வந்து ⋆
எங்கள் குழாம் புகுந்து ⋆
கூடு மனம் உடையீர்கள் வரம்பொழி ⋆
வந்தொல்லைக் கூடுமினோ ⋆
நாடு நகரமும் நன்கறிய ⋆
நமோ நாராயணாயவென்று ⋆
பாடு மனம் உடைப் பத்தர் உள்ளீர் ! ⋆
வந்து பல்லாண்டு கூறுமினே ॥ **1.1.4** ॥

அண்டக்குலத்துக்கதிபதி ஆகி ⋆
அசுரர் இராக்கதரை ⋆
இண்டைக் குலத்தை எடுத்துக் களைந்த ⋆
இருடீகேசன் தனக்கு ⋆
தொண்டக் குலத்தில் உள்ளீர் ! வந்தடி தொழுது ⋆
ஆயிர நாமம் சொல்லி ⋆

பண்டைக் குலத்தைத் தவிர்ந்து ⋆
பல்லாண்டு பல்லாயிரத்தாண்டென்மினே ॥ **1.1.5** ॥

எந்தை தந்தை தந்தை தந்தை தம் மூத்தப்பன் ⋆
ஏழ் படி கால் தொடங்கி ⋆
வந்து வழிவழி ஆட்செய்கின்றோம் ⋆
திருவோணத் திருவிழவில் அந்தியம் போதில் அரியுருவாகி ⋆
அரியை அழித்தவனை ⋆
பந்தனை தீரப் பல்லாண்டு ⋆
பல்லாயிரத்தாண்டென்று பாடுதுமே ॥ **1.1.6** ॥

தீயிற் பொலிகின்ற செஞ்சுடர் ஆழி ⋆
திகழ் திருச்சக்கரத்தின் ⋆
கோயிற்பொறியாலே ஒற்றுண்டு நின்று ⋆
குடிகுடி ஆட்செய்கின்றோம் ⋆
மாயப் பொருபடை வாணனை ⋆
ஆயிரந் தோளும் பொழி குருதி பாய ⋆
சுழற்றிய ஆழி வல்லானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.7** ॥

நெய்யிடை நல்லதோர் சோறும் ⋆
நியதமும் அத்தாணிச் சேவகமும் ⋆
கையடைக் காயும் கழுத்துக்குப் பூணொடு ⋆
காதுக்குக் குண்டலமும் ⋆
மெய்யிட நல்லதோர் சாந்தமும் தந்து ⋆
என்னை வெள்ளுயிர் ஆக்க வல்ல ⋆
பையுடை நாகப் பகைக்கொடியானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுவனே ॥ **1.1.8** ॥

உடுத்துக் களைந்த நின் பீதகவாடை உடுத்துக் ⋆
கலத்ததுண்டு ⋆
தொடுத்த துழாய்மலர் சூடிக் களைந்தன ⋆
சூடுமித்தொண்டர்களோம் ⋆
விடுத்த திசைக் கருமம் திருத்தித் ⋆
திருவோணத் திருவிழவில் ⋆
படுத்த பைந்நாகணைப் பள்ளிகொண்டானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.9** ॥

எந்நாள் எம்பெருமான் ⋆
உன்தனக்கடியோம் என்றெழுத்துப்பட்ட அந்நாளே ⋆
அடியோங்கள் அடிக்குடில் ⋆
வீடு பெற்றுய்ந்தது காண் ⋆
செந்நாள் தோற்றித் ⋆
திருமதுரையுள் சிலைகுனித்து ⋆
ஐந்தலைய பைந்நாகத் தலை பாய்ந்தவனே ! ⋆
உன்னைப் பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.10** ॥

‡ அல்வழக்கொன்றும் இல்லா ⋆
அணி கோட்டியர் கோன் ⋆
அபிமான துங்கன் செல்வனைப்போலத் ⋆
திருமாலே ! நானும் உனக்குப் பழவடியேன் ⋆
நல்வகையால் நமோ நாராயணாவென்று ⋆
நாமம் பல பரவி ⋆
பல்வகையாலும் பவித்திரனே ! ⋆
உன்னைப் பல்லாண்டு கூறுவனே ॥ **1.1.11** ॥

‡ பல்லாண்டென்று பவித்திரனைப் ⋆
பரமேட்டியை ⋆
சார்ங்கம் என்னும் வில்லாண்டான் தன்னை ⋆
வில்லிபுத்தூர் விட்டுசித்தன் விரும்பிய சொல் ⋆
நல்லாண்டென்று நவின்றுரைப்பார் ⋆
நமோ நாராயணாயவென்று ⋆
பல்லாண்டும் பரமாத்மனைச் ⋆
சூழ்ந்திருந்தேத்துவர் பல்லாண்டே ‖ **1.1.12** ‖

## பெருமாள் திருமொழி – தருதுயரந்தடாயேல்

‡ தரு துயரம் தடாயேல் ⋆
உன் சரண் அல்லால் சரண் இல்லை ⋆
விரை குழுவும் மலர்ப் பொழில் சூழ் ⋆
விற்றுவக்கோட்டம்மானே ⋆
அரிசினத்தால் ஈன்ற தாய் ⋆
அகற்றிடினும் ⋆
மற்றவள் தன் அருள் நினைந்தே அழும் குழவி ⋆
அதுவே போன்றிருந்தேனே ‖ **5.1** ‖

கண்டார் இகழ்வனவே ⋆
காதலன் தான் செய்திடினும் ⋆
கொண்டானை அல்லால் ⋆
அறியாக் குல மகள் போல் ⋆
விண் தோய் மதிள் புடை சூழ் ⋆
விற்றுவக்கோட்டம்மா ⋆
நீ கொண்டாளாயாகிலும் ⋆
உன் குரை கழலே கூறுவனே ‖ **5.2** ‖

மீன் நோக்கும் நீள் வயல் சூழ் ⋆
விற்றுவக்கோட்டம்மா ⋆
என் பால் நோக்காய் ஆகிலும் ⋆
உன் பற்றல்லால் பற்றிலேன் ⋆
தான் நோக்காது ⋆
எத்துயரம் செய்திடினும் ⋆
தார் வேந்தன் கோல் நோக்கி வாழும் ⋆
குடி போன்றிருந்தேனே ‖ **5.3** ‖

வாளால் அறுத்துச் சுடினும் ⋆
மருத்துவன் பால் ⋆
மாளாத காதல் ⋆
நோயாளன் போல் மாயத்தால் ⋆
மீளாத் துயர் தரினும் ⋆
விற்றுவக்கோட்டம்மா ⋆
நீ ஆளா உனதருளே ⋆
பார்ப்பன் அடியேனே ‖ **5.4** ‖

வெங்கண் திண் களிறடர்த்தாய் ⋆
விற்றுவக்கோட்டம்மானே ⋆
எங்குப் போய் உய்கேன் ⋆
உன் இணை அடியே அடையல் அல்லால் ⋆
எங்கும் போய்க் கரை காணாது ⋆
எறி கடல் வாய் மீண்டேயும் ⋆
வங்கத்தின் கூம்பேறும் ⋆
மாப் பறவை போன்றேனே ‖ **5.5** ‖

செந் தழலே வந்து ⋆
அழலைச் செய்திடினும் ⋆
செங்கமலம் அந்தரம் சேர் ⋆
வெங்கதிரோற்கல்லால் அலராவால் ⋆
வெந் துயர் வீட்டாவிடினும் ⋆
விற்றுவக்கோட்டம்மா ⋆
உன் அந்தமில் சீர்க்கல்லால் ⋆
அகம் குழைய மாட்டேனே ‖ **5.6** ‖

எத்தனையும் வான் மறந்த காலத்தும் ⋆
பைங்கூழ்கள் ⋆
மைத்தெழுந்த மா முகிலே ⋆
பார்த்திருக்கும் மற்றவை போல் ⋆
மெய்த் துயர் வீட்டாவிடினும் ⋆
விற்றுவக்கோட்டம்மா ⋆
என் சித்தம் மிக உன் பாலே ⋆
வைப்பன் அடியேனே ‖ **5.7** ‖

தொக்கிலங்கு யாறெல்லாம் ⋆
பரந்தோடித் ⋆
தொடு கடலே புக்கன்றிப் புறம் நிற்க ⋆
மாட்டாத மற்றவை போல் ⋆
மிக்கிலங்கு முகில் நிறத்தாய் ⋆
விற்றுவக்கோட்டம்மா ⋆
உன் புக்கிலங்கு சீர் அல்லால் ⋆
புக்கிலன் காண் புண்ணியனே ‖ **5.8** ‖

நின்னையே தான் வேண்டி ⋆
நீள் செல்வம் வேண்டாதான் ⋆
தன்னையே தான் வேண்டும் ⋆
செல்வம் போல் மாயத்தால் ⋆
மின்னையே சேர் திகிரி ⋆
விற்றுவக்கோட்டம்மா ⋆
நின்னையே தான் வேண்டி ⋆
நிற்பன் அடியேனே ‖ **5.9** ‖

‡ விற்றுவக்கோட்டம்மா ⋆
நீ வேண்டாயே ஆயிடினும் ⋆
மற்றாரும் பற்றிலேன் என்று ⋆
அவனைத் தாள் நயந்த ⋆
கொற்ற வேல் தானைக் ⋆
குலசேகரன் சொன்ன ⋆
நற்றமிழ் பத்தும் வல்லார் ⋆
நண்ணார் நரகமே ‖ **5.10** ‖

**திரு வித்துவக்கோட்டுவல்லி சமேத உய்யவந்த பெருமாள் திருவடிகளே சரணம்**